



திருச்சியில் மத்திய மாவட்ட திமுக சார்பில் நடைபெற்ற கண்டனப் பொதுக்கூட்டத்தில் கழக முதன்மைச் செயலாளரும் நகராட்சி நிர்வாக துறை அமைச்சருமான கே.என்.நேரு உரையாற்றினார். இதில் துணைப் பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி, மாவட்டச் செயலாளர் வைரமணி, மாநகர செயலாளர் மேயர் அன்பழகன், எம்.எல்.ஏ.க்கள் சவுந்தரபாண்டியன் பழனியாண்டி , மற்றும் கழக நிர்வாகிகள் பேரூர் தர்மலிங்கம், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஆனந்த் டோல்கேட் சுப்பிரமணி மாவட்ட துணைச் செயலாளர் முத்து செல்வம் விஜயா ஜெயராஜ் கருணாநிதி, பவுல்ராஜ், புத்தூர் தர்மராஜ் ஜான்சன் குமார் விஜயலட்சுமி கண்ணன் துர்கா தேவி, எஸ் வி ஆர் வரதராஜன் கருணாமூர்த்தி ராதாகிருஷ்ணன், முத்து பழனிஉள்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்டம் அறந்தாங்கியில் புதுக்கோட்டை தெற்கு மாவட்ட திமுக சார்பில் மத்திய பட்ஜெட்டில் நிதி ஒதுக்காமல் தொடர்ந்து தமிழ்நாட்டை வஞ்சிக்கும் ஒன்றிய அரசை கண்டித்து நகர கழக செயலாளர் க.ராஜேந்திரன் ஏற்பாட்டில், மாவட்ட அவைத் தலைவர் அ.சுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்ற மாபெரும் கண்டன கூட்டத்தில் சட்டத்துறை அமைச்சரும், புதுக்கோட்டை தெற்கு மாவட்ட திமுக செயலாளருமான எஸ்.ரகுபதி கண்டன உரையாற்றினார். கூட்டத்தில் சி.ராமநாதன், உதயம் சண்முகம், பரணி கார்த்திகேயன், ஆர்.ஆர்.கே.கலைமணி, இரா.ஆனந்த், அடைக்கலம், ஸ்ரீதேவி அண்ணாதுரை, த. மணிராஜன், சக்தி ராமசாமி, எஸ்.எம்.சீனியார் , வே.பொன் துரை,பொன். கணேசன், அழகு என்ற சிதம்பரம், டி.தங்கமணி, வி.ஆர்.இளையராஜா, குமார் என்ற துரைக் கண்ணு, கே.எஸ்.ரவி, அரு.வடிவேலு, மாரியப்பன், மகேஸ்வரி சண்முகநாதன், தி.முத்து, கே.சி.சிவக்குமார், விமலாதிராஜன், இரா. மேகநாதன், பாத்திமா பீவி,தேவி, சக்திவேல், ரம்யா பாலு, பழனியப்பன், மாநில, மாவட்ட, ஒன்றிய நகர நிர்வாகிகள், அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், .துணை அமைப்பாளர்கள், தொண்டர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### தீவுத்திடலில் நடைபெறும் 49 -வது இந்திய சுற்றுலா - தொழில்

# பொருட்காட்சியினை - இதுவரை 2,40,191 பேர் கண்டுகளிப்பு!

## சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் பெருமிதம்!



சென்னை, பிப்.10-

தீவுத்திடலில் நடைபெற்று வரும் 49-வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியை 08.02.2025 வரை 2,40,191 பொதுமக்கள் கண்டுகளித்து உள்ளார்கள் என சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

சென்னை தீவுத்திடலில் நடைபெற்று வரும் 49-வது இந்திய சுற்றுலா மற்றும் தொழில் பொருட்காட்சியில், முதலமைச்சர் அவர்கள் தலைமையில் நடைபெற்று வரும் தமிழ்நாடு அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகளை பொதுமக்கள் அனைவரும் எளிதில் அறிந்து பயன்பெறும் வகையில் பல்வேறு "திட்டங்களின் செயல் மாதிரிகளுடன் அரசு துறைகளின் அரங்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

அதனடிப்படையில் சுற்றுலாத்துறை, பொதுப்பணித்துறை, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், வருவாய்த் துறை, ஊரக வளர்ச்சித் துறை, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், பள்ளிக் கல்வித்துறை, உயர்கல்வித் துறை, தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள் துறை, கூட்டுறவுத்துறை, நெடுஞ்சாலைத்துறை, காவல் துறை, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை உள்பட பல்வேறு அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களின் 41 அரங்குகளுடன், ஒன்றிய அரசின் சென்னை துறைமுகம் மற்றும் இந்தியன் ஆயில் கார்ப்பரேசன் அரங்குகள் உள்பட மொத்தம் 43 அரங்குகள் சிறப்பான முறையில் அமைக்கப்பட்டுள்ளன.

இப்பொருட்காட்சியில் 110 சிறிய கடைகள் மற்றும் 30 தனியார் அரங்குகளும் அமைக்கப்பட்டுள்ளது. குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை விரும்பி உண்ணும் ஆவின் பால்கோவா, ஆவின் ஐஸ்கிரீம் உள்பட பல்வேறு திண்பண்டங்கள் இந்த பொருட்காட்சியில் விற்பனை செய்யப்படுகின்றன.

மேலும், 80,000 சதுர அடி பரப்பளவில் பொழுது போக்கு வளாகம் அமைக்கப்பட்டு அதில் 30 க்கும் மேற்பட்ட இராட்சத சாகச விளையாட்டு சாதனங்கள், சிறுவர் விளையாட்டு சாதனங்கள் மற்றும் நவீன கேளிக்கை சாதனங்கள் மக்கள் மனதை கவரும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது. சிறுவர் இரயில், பனிக்கட்டி உலகம், அவதார் உலகம், மென் காட்சியகம், மிரளவைக்கும் பேய் வீடு, 3D தியேட்டர், அறிவியல் உலகம் போன்ற பொழுது போக்கு அம்சங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

திங்கள் முதல் வெள்ளிக் கிழமை வரை அலுவலக நாட்களில் மாலை 3.00 மணி முதல் இரவு 10.00 மணி வரையிலும், சனி, ஞாயிறு மற்றும் அரசு விடுமுறை நாட்களில் காலை 11.00 மணி முதல் இரவு 10.00 மணி வரையிலும் பொருட்காட்சி நடத்தப்பட்டு வருகின்றது.

மேலும், பொருட்காட்சி நுழைவுச்சீட்டினை வரிசையில் நின்று வாங்க முடியாதவ ர்களுக்கு வசதியாக டிஜிட்டல் தொழில் நுட்பம் "UPI Payment Methods" மூலம் பணம் செலுத்தி எளிதில் நுழைவுச் சீட்டினை பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

பொருட்காட்சிக்கு வருகை தரும் பொதுமக்கள் வசதிக்காக சென்னை நகரின் முக்கிய பகுதிகளிலிருந்து அரசுப் பேருந்துகள் கூடுதலாக சுற்றுலாப் பொருட்காட்சிக்கு இயக்க சிறப்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

### ஈரோடு கிழக்கு இடைத்தேர்தல்: முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான

# கழக ஆட்சிக்கு கிடைத்த மிகப்பெரிய வெற்றி!

## வெற்றிபெற்ற வி.சி.சந்திரகுமார் பேட்டி!



ஈரோடு, பிப்.10-

ஈரோடு கிழக்குத் தொகுதியில் நடைபெற்ற இடைத் தேர்தலில் பதிவான வாக்குகளில் நான்கில் ஒரு பங்கை தி.மு.க. பெற்று இருக்கிறது. அதாவது 75% வாக்குகளைப் பெற்று தி.மு.க. மிகப் பெரிய வெற்றியடைந்திருக்கிறது. இதற்காக தமிழக முதல்வருக்கும் துணை முதல்வருக்கும் மாவட்ட அமைச்சர் முத்துசாமி அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றி என்று ஈரோடு கிழக்கு தொகுதி இடைத் தேர்தலில் வெற்றி பெற்ற தி.மு.க. வேட்பாளர் வி. சி. சந்திரகுமார் தெரிவித்துள்ளார்.

ஈரோடு கிழக்கு சட்டமன்ற தொகுதி இடைத் தேர்தலின் இறுதிச் சுற்று முடிவுகள் அறிவிக்க பட்டன.

இதில் சுமார் 90 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் தி.மு.க. வேட்பாளர் வி.சி. சந்திரகுமார் வெற்றி பெற்று இருக்கிறார்.

இதனை தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய வி.சி.சந்திரகுமார்,

மக்களை நேரடியாக வீதி, வீதியாக சென்று சந்தித்து அவர்கள் குறைகளை கேட்கும் வகையில் புதிய தொரு ஃபார்முலாவை நாங்கள் கையில் எடுத்து இந்த தேர்தலில் மக்களை சந்தித்தோம்.

அந்த வகையில் எங்களுக்கு 75% வாக்குகளை பெற்று திமுக வெற்றி பெற்றிருக்கிறது.

தொடர்ந்து தொகுதி மக்களை நான் இதே போல் சந்தித்து அவர்களுக்கான பணிகளை நிறைவேற்றுவேன் என்றும், கடந்த தேர்தலை விட இந்த தேர்தலில் நாம் தமிழர் கட்சி இரண்டு மடங்கு வாக்குகளை பெற்றிருக்கிறதே என்ற கேள்விக்கு பதில் அளித்த வி. சி. சந்திரகுமார், அதைப்பற்றி நாங்கள் எதுவும் சொல்வதற்கில்லை. ஏனென்றால் பதிவான வாக்குகளில் கடந்த தேர்தல்களில் இல்லாத அளவுக்கு 75 சதவீத வாக்குகளை திமுக பெற்று இருக்கிறது.

இது முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான தி.மு.க. அரசிற்கு கிடைத்த மிகப் பெரிய வெற்றி என்று கூறினார்.

### ஆ.மணி எம்.பி. - என்.செல்வராஜ் - ஆசி.தனபாலன் பங்கேற்பு!

# குழிக்காடு ப.மாயக்கண்ணன் - மா.அனிதா புதுமனை புகுவிழா!

## பி.என்.பி.இன்பசேகரன் தலைமையேற்று திறந்து வைக்கிறார்!

தருமபுரி, பிப். 10 -


தர்மபுரி மாவட்டம், பென்னாகரம் வட்டம், ஏரியூர் ஒன்றியம், பத்ரஹள்ளி, குழிக்காடு கிளைக் கழக துணைச் செயலாளர் ப.மாயக்கண்ணன் - மா.அனிதா ஆகியோரது புதிய இல்லம் திறப்பு விழா இன்று (10.2.2025 திங்கட் கிழமை) காலை 6 மணியளவில், குழிக்காட்டில் நடைபெறுகிறது.

மாவட்டக் கழகப் பிரதிநிதி ஆசி.தனபாலன் வரவேற்புரை ஆற்றுகிறார்.

இப்புதிய இல்லத்தை முன்னாள் மாவட்ட கழக செயலாளர் பி.என்.பி.இன்பசேகரன் தலைமை ஏற்று திறந்து வைக்கிறார்.

இவ்விழாவில் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி, தருமபுரி மாவட்ட மருத்துவர் அணியின் துணை அமைப்பாளர் பி.என்.பி.ராஜசேகரன், பென்னாகரம் தெற்கு ஒன்றியக் கழகச் செயலாளர் மடம் க.முருகேசன், பென்னாகரம் பேரூர் கழகச் செயலாளர் எம்.வீரமணி, முன்னாள் ஒன்றியக் கழகச் செயலாளர் காளியப்பன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்று சிறப்பிக்கின்றனர். கிளைக் கழகச் செயலாளர் பெ.செலம்பன், அவைத் தலைவர் அ.மயில்வேல், கிளைக் கழக பிரதிநிதி கோ.சிவக்குமார் ஆகியோர் நன்றி கூறுகின்றனர்.

# நான்காம் ஆண்டு நினைவு நாள்



# இரா.விசுவநாதன்

முன்னாள் அவைத் தலைவர், 105 வது வட்டம் அண்ணாநகர் பகுதி - தி.மு.க

மறைந்த நாள்: 10.02.2021

**தந்தையே! தெரியுமா உனக்கு!**
**அன்று "O.K. O.K." தொலைக்காட்சியில்**
**திரையிடும் போதெலாம் பார்த்து மகிழ்ந்தாய்!**
**இன்று, இன்னும் அரைநூற்றாண்டிற்கு**
**கழகத்தை கொண்டு செல்லவிருக்கும்**
**பெரியாரின் பெயரனாய் வாள் சுழற்றும்**
**மாட்சியைக் கண்டால், கொண்டாடித் தீர்ப்பாய்!**
**என்றென்றும் தங்கள் வழியில்!**
**இருவண்ணக் கொடி நிழலில்!**

திருமதி.**கிருஷ்ணவேணி விசுவநாதன்**


**வி.நந்தகுமார்** பி.ஏ.,
**ந.கவிதா**
**ந.சூர்யா** பி.காம்.,எம்.பி.ஏ.,
**ந.மாதங்கி**

**வி.நன்மாறன்** பி.எஸ்சி.,பி.எல்.,
கூடுதல் அரசு வழக்குரைஞர், சென்னை உயர்நீதி மன்றம்
**ஆ.கலைமதி** பி.ஏ.,பிஎட்.,
**ந.க.இயல்** பி.எஸ்.சி.,
**ந.க.இசை**

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## ம.கி. அம்பிகாபதி

**பிப்ரவரி 10 (2004)**



வடக்கு எல்லை போராட்டத்தில் கலந்து கொண்ட தமிழ் மாமுனிவர் மங்கலங்கிழார் மகனான இவர், இளமைக் காலத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு கழகப் பணியாற்றத் தொடங்கினார்.

முப்பது ஆண்டுகள், அரக்கோணம் நகரக் கழகச் செயலாளராக பொறுப்பு வகித்து அப்பகுதியில் கழகம் வளர்த்தவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டதோடு, நெருக்கடி கால மிசா சட்டத்தில் கைது செய்யப்பட்டு சிறை சென்றவர்.

"அரக்கோணம் என்றாலே அம்பிகாபதிதான். கழகத்தை ஆலமரமாய் வளர்த்தவர்" என முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் பாராட்டப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**